செய்தி வெளியீடு எண்: 105/2023 நாள்: 22.09.2023

## பத்திரிக்கைச் செய்தி

## மெட்ரோ இரயிலின் இயக்கத்தைத் தடுக்கும் வகையில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை

சென்னை மெட்ரோ இரயில், பயணிகளின் பாதுகாப்பினை உறுதிசெய்ய, பல்வேறு தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. அந்த வகையில், நெரிசல் மிகு நேரங்களில், இரயில் கதவுகளை மூட விடாமல் தடுப்பது, சிரமத்தை ஏற்படுத்துவது, போன்றவை தண்டனைக்குரிய குற்றம் என்பதை பயணிகள் அறிந்து கொள்ள வேண்டும். செயல்பாடுகள் மற்றும் பராமரிப்புச் சட்டம் 2002, பிரிவு 67படி, இரயிலின் இயக்கத்தை தடுப்பது, தடுக்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவோருக்கு, நான்கு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை மற்றும் ரூ.ஐயாயிரம் (ரூ.5000/-) வரை அபராதம் வசூலிக்கப்படும்.

மேற்குறிப்பிடப்பட்டுள்ளபடி, இரயிலின் இயக்கத்தை தடுப்பது, சிரமத்தை ஏற்படுத்துவது, போன்ற நடவடிக்கைகளில், யாரேனும் ஈடுபட்டால், வாடிக்கையாளர் உதவி எண் - 1860-425-1515 க்கு உடனடியாகத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தங்களது ஒத்துழைப்பு, அனைத்து பயணிகளின் பாதுகாப்பையும் நல்வாழ்வையும் உறுதி செய்கிறது.

**வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம், சென்னை – 600 035.**

@cmrlofficial Chennai Metro Rail @chennaimetrorail @ChennaiMetroRail www.chennaimetrorail.org